*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.64/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திருமதி.விஜயா க/பெ. அய்யப்பன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.04.2025.**

துவக்க நேரம் 01.27 A.N

**முதல் விசாரணை**

1) நான் தம்மம்பட்டியில் உள்ள மூலப்புதூர் கிராமத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள். கடந்த 10.05.2023 அன்று மாலை 04.30 மணியளவில் முத்துசோளம் பயிர் செய்திருந்த எங்களது காட்டில் நான் புல் பிடுங்கிக்கொண்டிருந்தேன்.

2) அப்பொழுது எனது மக்காச்சோள பயிர் காட்டில் லோகநாதனுக்கு சொந்தமான மாடு மேய்ந்துவிட்டது. அதை அருகில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த லோகநாதனிடம், நான் கேட்டேன். லோகநாதனுடன் அவரது மனைவி சித்ராவும் இருந்தார்.

3) நான் கேட்டதற்கு லோகநாதன், அப்படிதான் மேய்ப்போம் என்று சொல்லி எனது முடியை பிடித்து இழுத்து வளைத்து, கீழே தள்ளி அடித்துவிட்டார். மேலும் லோகநாதன் கீழே கிடந்த கல்லை எடுத்து, எனது மேல்உதட்டின் மீது குத்திவிட்டார். எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. எதிரி சித்ராவும், என்னை தாக்கினார்.

4) மேலும் லோகநாதன் மாட்டுன் கட்டப்பட்டிருந்த கயிற்றை அவரது கையால் சுற்றிக்கொண்டு எனது உடம்பில் தாக்கினார். எனக்கு வலி

தாங்கமுடியாமல் கத்தி சத்தம் போட்டேன். எனது கணவர், எனது சத்தம் கேட்டு அங்கு வந்தார். லோகநாதன் கல்லை எடுத்து, எனது கணவரின் நெஞ்சின்மேல் குத்தி, கைவிரலை பிடித்து வளைத்து உடைத்துவிட்டார். உடனே அக்கம், பக்கம் இருந்தவர்கள் வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். காயம்பட்ட நாங்கள் இருவரும், ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தோம்.

5) நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, தம்மம்பட்டி காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.35 A.N

ஒம்/–C.உதயசுந்தரம்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.64/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-5)***

*Name / Father's Name:* ***திரு.வெங்கடாஜலம் த/பெ. முத்துசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.04.2025.**

துவக்க நேரம் 01.36 A.N

**முதல் விசாரணை**

1) நான் தம்மம்பட்டியில் உள்ள மூலப்புதூர் கிராமத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி விஜயாவை தெரியும், எதிரிகளை தெரியும், எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள். கடந்த 10.05.2023 அன்று மாலை 04.30 மணியளவில் முத்துசோளம் பயிர் செய்திருந்த விஜயாவின் காட்டில் விஜயா புல் பிடுங்கிக்கொண்டிருந்தார். நான், விஜயா தோட்டத்திற்கு அருகில் எனது தோட்டத்தில் இருந்தேன்.

2) அப்பொழுது சாட்சி விஜயாவின் சத்தம் கேட்டு அங்கு சென்றேன். விஜயாவை, லோகநாதன் கல்லால் மேல் உதட்டின் மீது குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார், கையால், நெஞ்சில் குத்திவிட்டார். சித்ராவும், விஜயாவை அடித்தார். மேலும் லோகநாதன் மாடுகட்டும் கயிறால், விஜயாவின் உடம்பில் அடித்தார். விஜயா வலி தாங்க முடியாமல் கீழேவிழுந்தார்.

3) நான் செல்வதற்கு முன்பாக விஜயாவின் கணவர் தடுக்க சென்றார். அப்பொழுது விஜயாவின் கணவர் அய்யப்பனையும், லோகநாதன் கல்லால் அடித்து, மேலும் அய்யப்பனின் கைவிரலை பிடித்து வளைத்து உடைத்துவிட்டார். நான் சண்டையை சமாதானம் செய்துவைத்தேன். பின்பு

காயம்பட்ட இருவரும், ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சிகிச்சைக்காக சென்றார்கள். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.42 A.N

ஒம்/−C.உதயசுந்தரம்,<br>
நீதித்துறை நடுவர் எண்.2,<br>
ஆத்தூர்.